அகத்தியர் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை

விளம்பி ❂ மாசி (பிப்ரவரி – 2019) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் வியாச பெருமான் அருளிய ஆசி நூல் ........ 11
4. 21.11.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை**
**மகான் சுப்பிரமணியரின் ஞானசுருக்கம்** ........ 16
5. மாசி மாத பௌர்ணமி விழா ........ 30
6. பங்குனி மாத பௌர்ணமி விழா ........ 30
7. மகான் திருமாழிசை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல் ........ 31
8. மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல் ........ 34
9. அன்பர்களின் அனுபவங்கள் ........ 37
10. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 39
11. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 49

ஓங்காரக்குடில் ஆசான்

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளிடம்**

**ஆசிபெறும் நேரம்**

**தினசரி மதியம் 3 மணி**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

வகைபட பொருளுதவி செய்து
வணங்கி உடல் உழைப்பும்
மிகைபட செய்து ஞானிகள் தனை
மரணம் வென்ற சித்தர்களை போற்றி
போற்றி தடையற தொடருபவர்கள்
பெரும் பேறு நற்பேரும் அடைவரப்பா
ஆற்றல்மிகு ஆறுமுகனார் சூட்சும
அரங்க ஞானி அசைவுகள் அனைத்தும்
அனைத்தையும் உலக மாற்றத்துக்காக
அருளாய் தாங்கி வருகின்ற
இணையிலா கலிகால வேத நூலாம்
எங்கள் அரங்கனின் ஞானத்திருவடி நூலை

– மகான் வியாச பெருமான் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 43 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைக்கொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அனைவருக்கும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்கள்

அன்புடன் – இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

## சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

ஓம் சுகப்பிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60
ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சொரூபானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ஜம்பு மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70
ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திரிகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகைத் தேவர் திருவடிகள் போற்றி 80
ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் தூர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் தேரையர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி
ஓம் நந்தீஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.




அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# மாசி மாத ஞானத்திருவடி நூலிற்கு மகான் வியாசர் பெருமான் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. அன்னதானமே பிரதான தானமாம்
அன்ன பூரணியாக மகா சக்தியே
மண்ணுலக உயிர்களை காக்க
மாதருமமாம் அன்னதான சேவை

2. சேவையை காசி மண்ணில் செய்து
சித்தர்கட்கும் அமுதின் வழியே
புவனம் வியக்க சிரஞ்சீவி நிலை
புண்ணிய பலமடைந்தவர்க்கு அருள

3. அருளவே அன்னை சக்தியோடு
ஆறுமுகன் ஞான சக்தி கூடிட
தரும பலமிக்க தவசியாக அரங்கன்
தானதருமம் வளர்த்து நன்கு

4. நன்குமே தன் அவதாரத்தில்
நன்மை உலகோர் அடையும்படி
இன்பமான அருளமுது தன்னை
இரந்து யாவர்க்கும் பொதுவாய் வழங்கி

5. வழங்கி உயர் சேவை ஆற்றி
வரத்தை வென்ற வாசியை
களங்கமற ஆசை வழி நாட்ட
கருணை வடிவாக்கி தருமம் ஈட்ட

6. ஈட்டவே அன்னதானம் வழியே
ஈடு இணையில்லா சேவை ஆற்றிடும்
கட்டம் போக்கும் அரங்கமகா ஞானி
கரம்பட வருகின்ற ஞானத்திருவடி நூலுக்கு

7. நூலுக்கு விளம்பி சால் திங்களில்
நிலமதனில் வியாசர் பெருமான் யானும்
நூலுக்கு ஆசிதனை உரைப்பேன்
நிலவுலகில் அரங்கமகான் வாழும்

8. வாழும் துறையூர் மண்ணும்
வல்லமையான காசி மண்ணை போல்
நாளும் கோளும் நன்மை செய்கின்ற
ஞானமுடன் தானதருமம் புரிகின்ற

9. புரிகின்ற புண்ணிய பூமியப்பா
புரிதல் கொண்டு அரங்கன் பூமி
அறிகின்ற அடைகின்ற மக்களெல்லாம்
ஆறுமுகனுடன் அன்னபூரணி அருளும்

10. அருளும் கிட்டி வாழ்கின்ற காலம்
அன்னக் குறைவிலா பசிபிணி வாட்டமிலா
பொருளும் அருளும் புண்ணியமும் கூடி
புகழ்பட வாழ்ந்து சிறப்பரென்பேன்

11. என்கவே காசிக்கு நிகராக
என் அன்னை தந்த தருமம் போல்
சண்முகனார் ஏழாம் படை வீடென
சன்மார்க்கம் அமைத்து செய்து வரும்

12. செய்து வரும் மாதரும பலன் கண்டேன்
செப்பிட வியாசனும் வியந்து
மெய்ஞானம் தர அரங்க மகானுடன்
மண்ணிலே சூட்சுமமாக நிறைந்தேன்

13. நிறைந்திட காசி கயா என
நிம்மதி தேடி ஞானம் தேடி அலைபவர்களே
அறம் மிகுந்த அரங்கன் தடம் வந்து
அருளமுது உண்டு ஆசி பெற்றாலே போதும்

14. போதும் போதும் எனும் அளவில்
புகழும் பேரும் பொருளும் வளமும்
பூதலத்தில் அரங்கனுடன் சூட்சுமமாக
புண்ணியவான்களுக்கு வியாசனும் வரம் தருவேன்

15. தருகவே தவராசனை நோக்கி
தருமம் வளர்க்க பொருளுதவி
முருகா என தரும சாலைக்கான
முழுமையான கட்டுமானம் வகை

16. வகைபட பொருளுதவி செய்து
வணங்கி உடல் உழைப்பும்
மிகைபட செய்து ஞானிகள் தனை
மரணம் வென்ற சித்தர்களை போற்றி

17. போற்றி தடையற தொடருபவர்கள்
பெரும் பேறு நற்பேரும் அடைவரப்பா
ஆற்றல்மிகு ஆறுமுகனார் சூட்சும
அரங்க ஞானி அசைவுகள் அனைத்தும்

18. அனைத்தையும் உலக மாற்றத்துக்காக
அருளாய் தாங்கி வருகின்ற
இணையிலா கலிகால வேத நூலாம்
எங்கள் அரங்கனின் ஞானத்திருவடி நூலை

19. நூலை வணங்கி ஏற்றுமே
நிலவுலகில் வைத்திருப்போர் வாசிப்போர்
நாளும் பூஜிப்போர் வணங்குவோர்
நமனை வெல்வர் நவகோளிடரையும் வெல்வர்

20. வெல்வர் கலி மாயை சிக்கலை
வெல்வர் சகல துன்பங்களையும்
ஆள்பவரும் வணங்கி வாசிக்க
ஆளுமை சிறந்து ஞான ஆட்சியாக புரிவர்

ஞானத்திருவடி ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் வியாசர் பெருமான் அருளிய மாசி மாத ஞானத்திருவடி நூலிற்கான ஆசி நூலின் சாரம் :

உலக உயிர்களை காத்திடவே மகா சக்தியானவள் அன்னபூரணியாக காசி தேசத்தில் அவதரித்து அன்னதானத்தையே பிரதான தானமாகச் செய்து உலக உயிர்களை காத்து ரட்சித்தாள். ஞானம் அடைந்த சித்தர்கட்கும் அன்னதானத்தின் வழியாக அவள் அளித்த உணவின் வழியாகவும் இவ்வுலகமே வியக்கும் அளவிற்கு புண்ணிய பலம் அடைந்தவர்களுக்கு சிரஞ்சீவி நிலையை அருளினாள்.

இவ்வுலகினில் எங்கெல்லாம் அன்னதான சேவையை கடமையாகவும் உள்ளன்போடும் கனிவுடன் எவர் செய்து புண்ணிய பலத்தினை பெறுகிறார்களோ அவர்களுக்கு சிரஞ்சீவி நிலை எனும், என்றும் மரணமில்லாப் பெருவாழ்வை அளித்தாள். இவ்விதமே அன்னை ஆதிசக்தியும் அருளி நிற்க, ஆதிசக்தியுடன்

அன்னை மைந்தன் முருகப்பெருமானின் ஞான சக்தியும் கூடிநின்று கலியுக உயிர்களை காத்திடவே அன்னை சக்தியும் ஆறுமுக சக்தியும் ஒன்றிணைந்து தருமபலம் மிக்க மகா ஞான தவசியாக தன்னிகரில்லா தனிப்பெரும் ஞானியாக கலியுகத்தினை வெல்லும் பலம்மிக்க ஞானயோகியாக அரங்கமகா தேசிகனாய் அவதரித்து இவ்வுலகினில் அற்புதமாய் எல்லையில்லாது தானதர்மங்களை செய்துசெய்து தர்மபலம் வளர்த்து வர, அரங்கனும் தமது அவதாரத்தினில் உலக மக்கள் நன்மை அடையும்படியே இன்பமளிக்கும் அருளமுதாய் குடில் உணவினை உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாய் வழங்கி உயர்வான மேன்மையுடன் அன்னதான சேவையை தொடர்ந்து செய்து வந்து, வெல்லற்கரிய வாசியை வென்று குற்றமில்லாத ஞானம்தனை வரமாய் பெற்று மகான் ஞானியாகியுமே அன்னதான சேவை ஆற்றும் அன்பர்க்கும் தொண்டர்க்கும் அவர்தம் குற்றங்களை போக்கி கஷ்டங்களை நீக்கி அவர்கள் விரும்பிய வரமெலாம் அளித்து அற்புதமாய் தொண்டுகளை அளவிலாது செய்து உலக உயிர்களை காத்து ரட்சித்துக் கொண்டிருக்கும் அற்புத மகா ஞானி அரங்கமகா தேசிகனாரின் திருக்கரங்களில் தவழ்ந்து வெளிவரும் உயர் ஞானம் அளிக்கும் ஞான நூலாம் ஞானத்திருவடி நூலிற்கு விளம்பி வருடம் மாசி மாதம்தனிலே ஆசி நூல் தனையே வியாசர் பெருமான் யானுமே உரைக்கின்றன் என்கிறார் மகான் வியாசர் பெருமான்.

ஆதிசக்தி அவதரித்து அன்னதானம் செய்ததினால் பெருமை பெற்ற காசியைப் போல அரங்கன் அவதரித்திட்ட ஞானபூமி துறையூர் நகரமும், நாளும் கோளும் அன்பர் துயர் போக்கி நன்மையையே செய்கின்ற பூமியாக ஞானமும் தானமும் தருமமும் அளவிலாது செய்யப்படுகின்ற புண்ணிய பூமியாகும்.

இந்த அற்புதமான சூட்சுமத்தை, உண்மை நிலையை, துறையூர் மண்ணின் பெருமையை, அரங்கன் அவதார மகிமையை, அரங்கனின் தான தருமப்பலனை புரிந்துகொண்டு உணர்ந்து அரங்கன் வாழும் புண்ணியமிக்க ஞானபீடமாம் துறையூர் ஓங்காரக்குடிலினை பயபக்தி விசுவாசத்துடன் பணிந்து வணங்கும் மக்கள் எல்லோருக்கும் அரங்கனின் ஆசியும், முருகப்பெருமானின் அருளும் அன்னை அன்னபூரணியின் அருளும் கிடைக்கப்பெற்று, அவர்களது வாழ்நாள் முழுதும் உணவிற்கு பஞ்சமில்லாது வேண்டிய அளவிற்கு உணவைப் பெறும் அற்புதத்தினை பெற்று, பசி என்ற பேச்சிற்கே இடமில்லாமல் வாழ்வதோடு பொருள் வளமும், அருள் வளமும், புண்ணிய பலமும் பெருகி புகழ்மிக்க வாழ்வினை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

காசி மாநகரினிலே எம் அன்னை அன்னபூரணி மகாசக்தி செய்திட்ட தருமம்போல, செய்திட்ட அன்னதானம் போல, காசிக்கு நிகராக தமிழகத்திலே ஏழாம் படை வீடு எனும் பெயரினிலே முருகப்பெருமானும் சன்மார்க்கத்தினை அமைத்து செய்து வருகின்ற மாதருமங்களைக் கண்டேன் வியாசன் யானும்,

காசிக்கு நிகரான புண்ணியம் குடிலில் இருக்க கண்டேன். சொல்லப்போனால் வியாசன் யானும் வியந்து நின்று குடில் நாடி வரும் அன்பர்க்கு குடில் தருமம் செய்யும் அன்பருக்கு மெய்ஞானம் தந்திடவே உள்ளன்போடு உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனின் குடிலதனிலே சூட்சும நிலையில் என்றும் நிறைந்து நிற்கின்றேனப்பா

ஆதலினால் கலியுக வாழ் மக்களே காசிக்கு சென்று புண்ணியம் தேடுகிறேன், கயாவிற்கு சென்று நிம்மதியை தேடிப் போகிறேன் என்று காசிக்கும் கயாவிற்கும் நிம்மதி தேடியும், ஞானம் தேடியும் வீணில் அலைபவர்களே நீங்கள் வீணில் அலைந்திட வேண்டாம். கலியுகத்திலே அறம் மிகுந்த ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நாடி வந்து ஆங்கே ஞானிகள் அருள்பார்வையில் அருளாசிபட சமைக்கும் அருளமுதாம் குடில் உணவை உண்டு அரங்கனிடத்து ஆசி பெற்றாலே போதும், நீங்கள் போதும் போதும் எனும் அளவிற்கு புகழும் பேரும் பொருளும் சர்வ வளமும் தர்மம் செய்து வரும் புண்ணியவான்களுக்கு அரங்கனுடன் சூட்சுமமாக வியாசன் யானும் வரம் அருளி நிற்பேனப்பா.

ஆதலினாலே தவராசன் ஆறுமுக அரங்கனை நோக்கி பயபக்தியுடன் வருகை தந்து வணங்கி அரங்கனின் தருமம் வளர்த்திட பொருளுதவிகள் செய்தும் முருகா, முருகா, முருகா என்றே தர்மசாலைக்கான முழுமையான கட்டுமானம் வகையிலும் பொருளுதவிகள் செய்தும் அரங்கனை வணங்கி வருவதுடன் உடல் உழைப்பும் தந்து ஞானிகளையும் முற்றுப்பெற்ற சித்தர்களையும் மனம் உருகி பூஜித்து போற்றி துதித்து தினம்தினம் மறவாமல் பூஜைகள் செய்து வருகின்றவர்கள் பெறுதற்கு அரிய பெரும்பேற்றினை அடைவதுடன் நற்பெயரையும் அடைவார்கள்.

**அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அசைவுகள் அனைத்தையும் உலகினில் உலக மாற்றம் நடத்திட வேண்டி அருள் மொழிகளாய் தாங்கி வருகின்ற இணையில்லாத ஞானநூலாம், கலியுகத்தின் வேதநூலாம், ஞானிகள் எங்கள் அரங்கனின் ஞானத்திருவடி நூலினை ஏற்று வாங்கி படிப்பவரும், வைத்திருப்பவரும், நாளும் நாளும் பூஜையறையில் வைத்து பூஜிப்பவரும், வணங்குவோரும் எமனையும் வெல்லும் ஆற்றலைப் பெறுவார்கள். நவக்கிரகங்களினால் வரும் கிரகதோஷ துன்பங்களையும் வெல்வார்கள். கலியுகத்தின் மாமாயையும் வென்று கடைத்தேறுவர், சகலவிதமான துன்பங்களையும் வென்றிடுவார்கள். நாட்டை ஆள்பவரும் வணங்கி வாசித்து நடந்திட அவர்களது ஆட்சியும் ஆளுமையும் சிறந்து நாட்டினில் ஞானஆட்சி புரிவர்** என தமது ஞானத்திருவடி ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வியாசர் பெருமான்.

–சுபம்–

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
திருச்சி மாவட்டம், துறையூர், ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
21.11.1988 அன்று அருளிய

# மகான் சுப்பிரமணியரின் ஞானசுருக்கம் அருளுரை

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள பெரியோர்களே, தாய்மார்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

சுப்பிரமணியர் ஞானசுருக்கம் 1, சுப்பிரமணியர் ஞானசுருக்கம் 2, சுப்பிரமணியர் ஞானானந்தம் 5ல் உள்ள கவிகளுக்கு, நாங்கள் அறிந்த உண்மையை உங்களுக்கு சொல்கிறோம். இதை பயபக்தியுடன் கேட்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது ஞானிகளின் வாக்கு.

ஆசான் சுப்பிரமணியர் உபதேசித்த சுப்பிரமணியர் ஞான சுருக்கம் ஒன்று என்ற நூல் சுட்டிக்காட்ட முடியாத ஒன்றை சொல்லுவதாகும். சுருக்கம் என்றால் விரிவு என்ற ஒன்று இருக்கிறது என்று அர்த்தம். ஞானம் என்பது இலக்கணத்துக்கு உட்படாத ஒன்று, சுட்டிக் காட்ட முடியாத ஒன்று. சுட்டி காட்ட முடியாத ஒன்றுதான் ஞானம்.

ஞானம் என்ற வார்த்தை தெளிவு, கூர்மை, அறிவு என்று பொருள்படும். எதைப் பற்றிய ஞானம்? எதைப் பற்றிய அறிவு? உலக நடையைப் பற்றிய அறிவா? உலகத் தோற்றத்தைப் பற்றியா? உலகத் தோற்றத்திற்கு காரணமான ஒன்றைப் பற்றியா? காரணமானது எது என்று ஆராய்ந்து பார்த்து தெளிவதுதான் ஞானம். அதை அறிவு என்றும் சொல்லலாம்.

ஞானம் என்பது ஒரு எல்லைக்கு அடங்காத ஒன்று, எல்லைக்கு உட்பட்ட ஒன்று. ஞானம் என்பது மனிதனின் ஆராய்ச்சிக்கு உட்படாத ஒன்று, ஆனாலும் உட்பட்ட ஒன்று. உட்படாத ஒன்று எப்படி செயல்பட முடியும். ஞானத்திற்கு உட்படாத ஒன்று, அறிவுக்கு உட்படாத ஒன்று, ஆனால் உட்பட்ட ஒன்று. அந்த உட்பட்ட ஒன்றை விரிவாகவும் பேசியிருக்கிறார், சுருக்கமாகவும் பேசியிருக்கிறார்.

ஞானம் என்ற தத்துவத்தை, ஞானம் என்ற மெய்யறிவை, தூய அறிவை, துல்லியமாக அறிந்து தன்னை உயர்த்திக் கொண்டவர் ஆதி தலைவர் ஆசான் சுப்பிரமணியர். நாம் அடைந்த இன்பத்தை, இந்த உலகம் முழுவதும் அடைய வேண்டுமென்று ஆசான் சுப்பிரமணியர் எண்ணினார்.

ஆன்மீகவாதிகள் நாம் அடைந்த இன்பத்தை அடைந்து, மேலான நிலையை அடைந்து உயரவேண்டும் என்பதற்காக சமஸ்கிருதத்திலும், தமிழிலும் நூல்களை எழுதியுள்ளார். இதற்கு முன்னே சித்தி பெற்றவர்கள் இவருடைய அருட்கடாட்சத்தால்தான் சித்தி பெற்றார்கள். இனிமேலும் சித்தி பெறுபவர்கள் இவருடைய அருட்கடாட்சத்தால்தான் சித்தி பெற முடியும்.

ஆகவே விரிந்த பல கருத்துக்களை, சுருக்கமாக ஒரே கவியில் சொல்லியிருக்கிறார். சுப்பிரமணியர் ஞான சுருக்கம் ஒன்று என்ற நூலில் ஆசான் சுப்பிரமணியர் ஞானத்தை உபதேசிக்கிறார். இந்த நூலைப் பற்றி பேச இருக்கிறோம். இதை பயபக்தியுடன் கேட்கின்ற மக்கள் ஆன்மீக விளக்கங்களை பெற முடியும்.

முன்செய்த நல்வினையின் பயனால்தான் இதை கேட்க முடியும். முன் செய்த நல்வினைப்பயன் இருந்தால்தான் உணர முடியும், உணர்ந்த ஒன்றை பின்பற்ற முடியும். உணர்ந்தால் மட்டும் போதாது பின்பற்ற வேண்டும். பின்பற்ற வேண்டும் என்றால், ஆசான் சுப்பிரமணியரின் திருவருள், அருட்கடாட்சம், அருட்பொக்கிஷம், அந்த அருள் தடாகத்தை சிறிதளவாவது சார்ந்திருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் இந்த தத்துவத்தை உணர முடியும், பின்பற்ற முடியும்.

ஆசான் சுப்பிரமணியர் போன்ற புனிதமானவர் சொன்ன நூல்களை கேட்பதே நல்லது. அந்தக் காரணத்தினால்தான் இந்த நூலை நாம் இப்பொழுது படிக்கிறோம்.

**செந்திருவாம் அண்டவரை மனதைத்தானும்**
**செலுத்தியே சிறுவாசற் குள்ளேசென்று**
**அந்தரமாய் நின்றதொரு சபையைப்பார்த்து**
**ஐம்புலனை யண்டமதிற் சேர்க்கும்போது**
**சுந்தரம்போற் சிலம்பொலியுங் காதிற்கேட்கும்**
**சுப்ரமண்ய னென்றுசொல்லப் பேரும்கொண்டேன்**
**மந்திரம் போற் கும்பமுனி மகனே ஐயா**
**மவுனமுட னென்றிதுவே வாகாய்முற்றே.**

**– சுப்பிரமணியர் ஞானச்சுருக்கம் 1 – கவி எண் 1.**

இந்த கவியின் சாரம் போகர் பன்னீராயிரம், போகர் ஏழாயிரம், திருமூலர் மூவாயிரம், திருமூலர் எட்டாயிரம், அகத்தியர் கலைஞானம் ஆயிரத்திஐநூறு

போன்ற நூல்களில் ஆயிரக்கணக்கான பாடல்களில் விரித்தும், சுருக்கியும் தத்துவத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். போகர் பன்னீராயிரம் பாடலை இவர் ஒரே கவியில் சொல்லியிருக்கிறார். ஒரே பாடலை பன்னீராயிரம் பாடலாகவும் சொல்லலாம், பன்னிரண்டு லட்சம் பாடல்களாகவும், பன்னிரண்டு கோடி பாடல்களாகவும் சொல்லலாம்.

**செந்திருவாம் அண்டவரை மனதைத்தானும் –** செந்து என்றால் சிகப்பு, செம்மையான என்று பொருள்படும். அண்டம் என்பது புருவமத்தி. அதை சிரசு என்று சொல்வார்கள். செம்மையான பொருளைப் பற்றி ஆசான் வள்ளுவர் சொல்லும்போது,

**பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு.**

**– திருக்குறள் – மெய் உணர்தல் – குறள் எண் 358.**

செம்மையான பொருளை அறிய வேண்டுமென்றால், அதற்கு எதிர்முகமாக உள்ள தாழ்ந்த ஒன்றை அறிந்திருக்க வேண்டும். கண்ணாடி கல்லை அறிந்தவன்தான் வைரத்தை பார்க்க முடியும். வைரத்தை மட்டுமே பார்த்தவனுக்கு நிச்சயமாக அதன் தன்மை தெரியாது. தரமில்லாத ஒன்றை அறிந்தால், தரமான ஒன்றை அறிய முடியும்.

செந்தூரம் என்றால் செம்மையான ஒன்றை அறிந்தான். நெல்லைப் பற்றி அறிவதற்கு அதன் உமியைப் பற்றி அறிய வேண்டும். அந்த உமியையும், அதன்பிறகு உள்ள தவிடையும் அறிய வேண்டும். அதற்குப் பிறகுதான் அரிசி. இவ்வாறு இளநீரை அறிய வேண்டும். இளநீர் மேலே மட்டை இருக்கும், அது மட்டைக்கு அடியில் சிறிய ஓடு இருக்கும். அந்த ஓட்டை பிரித்தால் உள்ளே தேங்காய் இருக்கும். அப்புறம் இளநீர் இருக்கும். இப்படி மூன்று பகுதியாக இருக்கும். இதெல்லாம் ஒரு பொருளில் அடங்கி இருக்கிறது. தேங்காயை மட்டும் பார்த்தவனுக்கு இளநீரை பற்றி தெரியாது. இளநீர் என்ற பொருளில் மேலே மட்டை, உள்ளே ஓடு, அதன்பிறகு தேங்காய், இளநீர் என்று அடுக்கடுக்காக இருக்கிறது. இப்படி அடுக்கடுக்காய் இருக்கின்ற பூரணத்தை அறிந்ததால், செந்தூரம் என்கிற செம்மையான பொருளை அறிந்தான்.

உடம்பிற்குள்ளே கருணை என்ற ஒன்று இருக்கிறது. அந்தக் கருணையை உணர்ந்து கருமையை நீக்கினால், செம்மையான பொருள் வந்தது. வீடு முழுவதும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஒரு தீபம் ஏற்றினால் அந்த வீடு முழுவதும் வெளிச்சம் வருகிறது அல்லவா, அங்கே இருந்த இருள் நீங்குகிறது அல்லவா, இருள் எங்கேயும் போகவில்லை, தீபத்தை அணைத்தால் மீண்டும் இருள் வந்து சூழ்ந்து கொள்ளும், இருள் அங்கே இருக்கிறது, வெளிச்சமும் அங்கே இருக்கிறது, தீபம் அணைந்தால் இருள் சூழ்ந்து கொள்ளும்.

இருளும் அங்கே இருக்கிறது வெளிச்சமும் அங்கே இருக்கிறது, இப்படி ஒன்றில் ஒன்றாக இருக்கிறது. ஆகவே இருளில் ஒளியும், ஒளியுள் இருளும் இருக்கிறது. இப்படியாக கருப்பில் சிவப்பு இருக்கும், சிகப்பில் கருப்பு இருக்கும்.

**செந்திருவாம் அண்டவரை மனதைத்தானும்** – செந்தூரம் என்றால் செம்மையான தோற்றம். உருவு என்பது தோற்றம். அண்டம் என்பது புருவமத்தி, சிரசு.

**செலுத்தியே சிறுவாசற் குள்ளேசென்று** – இந்த செந்துருவாய் இருக்கக் கூடிய, செம்மையாக இருக்கக் கூடிய, செம்மையான பாதையான புருவமத்தியில் செலுத்துதல் ஆகும். செலுத்துதல் என்பது ஒரு பொருளை இன்னொன்றுக்குள் உட்புகுத்த வேண்டும். செந்துருவாய் இருக்கின்ற அண்ட வாசலில் செலுத்த வேண்டும். அண்டம் என்றால் புருவமத்தி.

**அந்தரமாய் நின்றதொரு சபையைப்பார்த்து** – சபை என்றால் ஒன்றை தாங்கியிருக்க வேண்டும். ஆனால் இது அந்தரமாய் நின்றதொரு சபை என்கிறார். அந்தரமாய் இருக்கின்ற பொருள் எது? இந்த உலகம் அனைத்தும் அந்தரமாக இருக்கிறது. எந்த பொருளையும் எதுவும் தாங்கிப் பிடித்திருக்கவில்லை. எத்தனையோ கோடான கோடி அண்டங்கள் அப்படியே அந்தரமாய் இருக்கிறது. அதேபோன்று ஞானமும் இதற்கும் அதற்கும் அப்பால் நிற்கும்.

ஆகவே இது தேவவாழ்க்கையும் இல்லை, நரவாழ்க்கையும் இல்லாமல் நடுவாழ்க்கையில் இருக்கிறான். இது நடு தன்மையுள்ளது. அதைத்தான் அந்தரமாய் என்கிறார். தாங்கும் சக்தி இன்றி, ஆதாரமில்லாத ஒன்றாக அந்தரமாய் இருக்கிறது. ஒரு பொருள் இருக்க வேண்டுமென்றால் அதற்கு ஆதாரம் இருந்தால்தான் கீழே விழாமல் இருக்கும். ஞானத்திற்கு ஆதாரம் இல்லை, அதற்கு உணர்வே ஆதாரம், சிறப்பறிவே ஆதாரம்.

அந்தரம் என்றால் புருவமத்திதான். புருவமத்தி என்றால் ஆகாயம் வெட்டவெளி. இந்த வெட்டவெளியில் அந்தரமாய் ஆதாரம் இன்றி இந்த சபை இருக்கிறது என்பதை அந்தரமாய் நின்றதொரு சபை என்கிறார். வெட்ட வெளியே ஒரு மேடையாக இருக்கிறது. அதைப் பார்ப்பதற்கு எவ்வளவு சிறப்பாக இருக்கும். அது சிறப்பானதுதான்.

**அந்தரமாய் நின்றதொரு சபையைப்பார்த்து**
**ஐம்புலனை யண்டமதிற் சேர்க்கும்போது**

ஐம்புலன்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருக்கும். நா அறிகின்ற ஒன்றை மூக்கு அறிய முடியாது. மூக்கு அறிகின்ற ஒன்றை கண் அறிய முடியாது. கண் ஒன்று அறிவதை காது அறிய முடியாது. நாக்கில் வைக்கும் பொருளை மூக்கில் வைத்தால் பயன்படாது, சுவையை அறிய முடியாது. மூக்கில் இருக்கும்

வாசனையை நாக்கில் அறிய முடியாது. கண்ணால் பார்ப்பதை காதால் பார்க்க முடியாது. இப்படி ஐம்புலன் அதனதன் தொழிலை செய்து கொண்டேயிருக்கும்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம்புலன்கள் அதுஅது தனித்தனியாக இருக்கும். அந்தரம் என்று சொல்லப்பட்ட இடத்தில்தான் ஐம்புலனை ஒருமுகப்படுத்த முடியும். புருவமத்தி என்று சொல்லப்பட்ட இடத்தைப் பார்த்தால் அன்றி, இந்த புலன்கள் அனைத்தும் ஒருநிலைப்படாது.

புலன்கள் ஒருமுகப்படுகின்ற இடம் புருவமத்தி என்றும், சொர்க்கவாசல் என்றும் சொல்லப்படுகின்ற பத்தாம் வாசலில்தான் உள்ளது. பத்தாம் வாசலை நோக்கும் போதுதான் இந்த புலன்கள் எல்லாம் ஒருமுகப்படும். இல்லையென்றால் பத்தாம் வாசல் புலப்படாது. பத்தாம் வாசல் என்று சொல்லப்பட்ட சொர்க்க வாசலுக்கு செல்ல புலனை ஒருமுகப்படுத்த வேண்டும்.

**சுந்தரம்போற் சிலம்பொலியுங் காதிற்கேட்கும்** – சுந்தரம் என்றால் அழகு என்று ஒரு பொருள் உண்டு. பத்தாம் வாசலுக்குள் சென்ற வாசி குய்யத்தில் ஒடுங்கும். அப்படி ஒடுங்கிய உடனே இந்த தசநாதம் கேட்கும், சிலம்பொலி காதில் கேட்கும்.

**சிலம்பொ லியென்னக் கேட்கும டிமெத்த**
**சிக்குள்ள பாதை துடுக்கமடி**
**வலம்புரி யச்சங்க மூது மடிமேலே**
**வாசியைப் பாரடி வாலைப்பெண்ணே.**

**– மகான் கொங்கணர் – வாலைக்கும்மி – கவி எண் 26.**

சுந்தரம்போல் சிலம்பொலி கேட்கும். இந்த ரகசியத்தை உலகத்தில் யாரும் அறிய முடியாது. உலகத்தைப் பற்றிய அறிவால் அறிய முடியுமா? ஆன்மாவைப் பற்றிய அறிவால் அறிய முடியுமா? ஆன்மாவைப் பற்றி அறிந்த மக்கள் பேசுகின்ற பேச்சுதான் இது. உலகத்தைப் பற்றி பேசுகின்ற மக்கள் இதை அறிய முடியாது. அது அநித்தியத்தில் ஒடுங்கும், இது நித்தியத்தில் ஒடுங்கும்.

ஆனால் ஆன்மாவைப் பற்றி பேசுகின்ற பேச்சு நித்தியத்தில் ஒடுங்கும். ஆகவே நித்தியமும் அநித்தியமும் எங்கே ஒன்று கலக்கிறதோ அதை கண்டவர்கள் ஞானிகள். இதை அறிந்தவர்தான் ஆதி தலைவன்.

**சுந்தரம்போற் சிலம்பொலியுங் காதிற்கேட்கும்**
**சுப்ரமண்ய னென்றுசொல்லப் பேரும்கொண்டேன்**

சுப்பிரமணியம் என்றாலே தத்துவம். நித்தியத்தை நான் கண்டவன். இந்த உலக ஆசார பழக்கவழக்கங்களுக்கு நான் உட்பட்டவனல்ல. சுந்தரம்போல் சிலம்பொலியைக் கேட்டதால்தான் எனக்கு சுப்பிரமணியம் என்று பெயர் வந்தது. அழகு பொருந்திய சிறப்பு பொருந்திய சிலம்பொலியை நான் காதில் கேட்டதால் எனக்கு சுப்பிரமணியம் என்ற பெயர் வந்தது.

**மந்திரம் போற் கும்பமுனி மகனே ஐயா** – இந்த தத்துவத்தை நான் உணர்ந்தேன். அதனால் மகன் என்று சொன்னார். என் பெருமையை எல்லோரும் உணர முடியாது. பார்த்தால் தோற்றம் ஒரே தன்மையாக இருக்கும். என்னை நீ உணர்ந்ததால் மந்திரம் போல் கும்பமுனி மகனே ஐயா என்று சொல்கிறார்.

**மவுனமுட னென்றிதுவே வாகாய்முற்றே** – மோனநிலை என்ற ஒன்று இருக்கிறது. வாய் பேசாதிருப்பது மோனநிலை அல்ல. வாய் பேசிக்கொண்டே இருப்பார்கள் ஆனால் மோனநிலையில் இருப்பார்கள். ஒடுங்குகின்ற வாசிக்கு மோன நிலை என்று பெயர். இந்தக் காற்று அப்படியே நின்றுவிடும். இதற்கு சமாதி நிலை என்று பெயர். அவன்தான் மோனநிலையில் இருக்கிறான்.

மோனநிலையை அறிந்த மக்கள்தான் பிறவித்துன்பத்தை ஒழிக்க முடியும். மற்றவர்கள் அத்தனை பேரும் ஏதோ கதை சொல்லிக் கொண்டு இருக்கலாமே தவிர ஒன்றும் அறிய முடியாது. மோனநிலை அறிந்தவர்கள் எதை பேசினாலும் அதில் ஞானத்தின் சாரம் இருக்கும். மோனநிலை அறிந்தவன் பேச்சை கேட்டால் ஒருவன் எவ்வளவு கல்வி கற்றிருந்தாலும் அந்த அகந்தை அடங்கிதான் ஆகவேண்டும்.

**கேளப்பா உகாரமது விந்துவாகும்**
**கிருபையுள்ள மகாரமது சத்தியாகும்**
**ஆளப்பா அகாரமது மூலமாகும்**
**அப்பனே சிகாரமது வன்னியாகும்**
**நாளப்பா வகாரமது வாசியாகும்**
**நல்லதொரு ஓங்காரம் நடுவிலாகும்**
**வாளப்பா ஊமையென்ற யெழுத்தைக்கண்டு**
**வளமாகத் தெரிந்துகொண்டால் ஞானந்தானே.**

**– சுப்பிரமணியர் ஞானச்சுருக்கம் 2 – கவி எண் 1.**

இதுதான் ஞானம் என்று சொல்லிவிட்டார்கள். அகண்ட பரிபூரணத்தைப் பற்றி பல லட்சக்கணக்கான பாடல்களில் சொல்ல வேண்டியவற்றை முதல் பாடலில் சொல்லிவிட்டேன், இப்பொழுது இரண்டாவது பாடலாக சொல்கிறேன் என்கிறார்.

**கேளப்பா உகாரமது விந்துவாகும்** – உள்ளே செல்லுகின்ற உகார காற்றுதான் விந்து. உள்ளே சென்ற காற்று அங்கேயே தங்கி விட்டால் அதுதான் சுக்கில சுரோணிதம். வருகின்ற காற்றுதான் சக்தி, போகின்ற காற்று சிவம். அந்த சக்திக்கு விந்து என்ற பொருளுண்டு. நீ உதிப்பதற்கும் நான் உதிப்பதற்கும் காரணம் விந்துதான். அது உள்ளே செல்லுகின்ற காற்றுதான்.

**கேளப்பா உகாரமது விந்துவாகும்**
**கிருபையுள்ள மகாரமது சத்தியாகும்**

மத்திம ஸ்தானம்தான் மகார ஸ்தானமாகும். அதுதான் சக்தி. உந்தி கமலம்தான் ஒரு மனிதனுக்கு மிகப் பெரிய ஆற்றலை உண்டாக்கக் கூடிய இடம்.

**ஆளப்பா அகாரமது மூலமாகும்** – மூலம் என்றால் குய்யம். உகார சக்தி விந்து. அகாரம் மூலமாகும்.

**அப்பனே சிகாரமது வன்னியாகும்** – சிகார ஸ்தானம், இதய ஸ்தானம். ஒரு மனிதனுக்கு பிராணன் இயங்குகின்ற இடம் இதய ஸ்தானம்தான். அதற்கு வன்னி என்று பெயர். வன்னி என்றால் அக்னி என்று பொருள்படும்.

**நாளப்பா வகாரமது வாசியாகும்** – வகார ஸ்தானம் என்பது கண்ட ஸ்தானம் ஆகும். மூச்சுக்காற்று இயங்கக் கூடிய இடம் கண்டஸ்தானம்.

**நல்லதொரு ஓங்காரம் நடுவிலாகும்** – ஓங்காரம் என்று சொல்லாமல், நல்லதொரு ஓங்காரம் என்று சொல்கிறார். இதையெல்லாம் அறிந்தால்தான் நல்லதொரு ஓங்காரமாக இருக்க முடியும். இவ்வளவு இரகசியத்தை அறிந்தால்தான் யோகியாக முடியும்.

**வாளப்பா ஊமையென்ற யெழுத்தைக்கண்டு** – ஊமைக்கு எழுத்து இல்லை. பேச முடியாத ஒன்றுக்கு எழுத்து தேவையில்லை. ஊமை என்பதற்கு மோனம் என்ற பொருளுண்டு, மௌனம் என்ற பொருளுண்டு. இந்தப் பேச்சை நன்கு விழிப்போடு கவனமாக இருந்து கேட்க வேண்டும். ஏனென்றால் ஞானத்தை ஒன்றோடு ஒன்றாக பின்னியிருக்கிறார்கள். ஒரே நூலில் பன்னிரண்டு லட்சம் பாடல்களை பாடியிருக்கிறார். அப்படி எழுதிய பாடல்களை இரண்டு வகையாக பிரித்திருக்கிறார்.

**வளமாகத் தெரிந்துகொண்டால் ஞானந்தானே** – திருத்தமாக தெரிந்து கொள்ள வேண்டும், வளப்பமாக தெரிந்து கொள்ள வேண்டும். வளம் என்றால் தெளிவாக திட்டமாக உறுதியாக நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி தெரிந்து கொண்டால்தான் ஞானம்.

**ஞானமென்று வங்கென்றே இடையேமூட்டு**
**நலமாகச் சிங்கென்றே நடுவேமூட்டு**
**மோனமென்ற சுழிமுனையில் அங்கென்றூணு**
**முதலென்ற பிரணவத்தைத் தெரிந்துகொண்டு**
**தானமென்ற ஓங்காரங் கொண்டபோது**
**சரியான ஞானமது சித்தியாகும்**
**கானமுட னுந்தனுக்குச் சொல்லிவிட்டேன்**
**கருத்துடனே இரண்டையும்நீ கண்டுதேறே.**

**– சுப்பிரமணியர் ஞானச்சுருக்கம் 2 – கவி எண் 2.**

**ஞானமென்று வங்கென்றே இடையேமூட்டு** – வங் என்றால் கண்டஸ்தானம். இடையே மூட்டு என்றால் இடகலையைப் பற்றி சொல்கிறார்.

இடகலையை மூட்ட வாசியை இயக்கு என்கிறார். வங் என்றால் வாசியை நிறுத்துதல் என்று பொருள். வகார ஸ்தானத்தில் வாசியை நிறுத்து என்கிறார்.

**நலமாகச் சிங்கென்றே நடுவேமூட்டு** – புருவமத்திக்கு வந்துவிடு என்கிறார்.

**மோனமென்ற சுழிமுனையில் அங்கென்றூணு** – மோனமென்ற வார்த்தைக்கு சுழிமுனை என்று பொருள். மோனம் என்று சொன்னாலே விழிப்பாக கேட்க வேண்டும், சலிப்பாக கேட்கக் கூடாது. மோனம் என்றால் சுழிமுனை என்ற பொருளுண்டு.

**முதலென்ற பிரணவத்தைத் தெரிந்துகொண்டு** – முதலென்ற சொல்லுக்கு முதன்மையானது என்று அர்த்தம். முதன்மையானது என்றால் பிரணவம் ஆகும்.

**தானமென்ற ஓங்காரங் கொண்டபோது** – தானமென்ற சொல் இங்கே தானத்தைக் குறிக்காது. ஸ்தானம் என்பதாகும். ஸ்தானம் அதுதான் ஓங்காரத்தின் இடம் என்கிறார்.

**சரியான ஞானமது சித்தியாகும்** – அதுதான் சரியான ஞானம், அதுவே சித்திக்கு வழியாகும். இப்படியெல்லாம் ஞானத்தைப் பற்றி சொல்கிறார்.

**கானமுட னுந்தனுக்குச் சொல்லிவிட்டேன்** – கானம் தியானம் என்பதெல்லாம் எதுகைக்காக சொல்லியிருக்கிறார்கள்.

**கருத்துடனே இரண்டையும்நீ கண்டுதேறே** – இடகலையையும் பிங்கலையையும் கருத்துடனே தெரிந்து கொண்டு நீ தேற வேண்டும் என்று சொல்கிறார்.

**காட்டுங் குறியும் கடந்தவக் காரணம்**
**ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்**
**கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது**
**ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே.**

**– திருமந்திரம் – மோனசமாதி – கவி எண் 2937.**

ஞானத்தை ஒன்றாகவும், இரண்டாகவும் சொல்கிறார். இந்த இரகசியத்தை சொன்னால் மட்டும் போதாது. அந்த இரண்டையும் ஆசான்தான் கூட்டி வைக்க வேண்டும்.

கண்டது, கேட்டது, அறிந்தது, உணர்ந்தது, சிந்தித்தது, தெளிந்தது என அனைத்தையும் சொல்லிவிட்டார். இந்த தத்துவம் எப்படியென்றால்? இதையெல்லாம் படித்தாலும், எவர் சொன்னாரோ அவர்தான் செய்து காட்ட முடியும். அவர்தான் செய்ய முடியும்.

முதலில் ஒன்றாக சொன்னார், பின்னர் இரண்டாக சொல்கிறார். எதுவாக இருந்தாலும் ஒன்று என்று உறுதியாக நில்லு என்று சொன்னார். அந்த

ஒன்றில் உறுதியாக இருப்பதற்கு இரண்டு என்று சொன்னார். இப்பொழுது பஞ்சபூதத்தையும் அறிய வேண்டும் என்று சொல்கிறார்.

**அஞ்சுமூணு மெட்டதா யநாதியான மந்திரம்**
**நெஞ்சிலே நினைந்துகொண்டு நீருருச் செப்பிரேல்**
**பஞ்சமான பாதகங்க ளூறுகோடி செய்யினும்**
**பஞ்சுபோல் பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 18.**

இதையெல்லாம் சிந்தித்தால்தான் நாம் செய்த பாவம் பஞ்சுபோல் பறக்கும். இல்லையென்றால் நாம் செய்த பாவம் இரும்பு போல் ஆகிவிடும். இதையறிந்தால் நாம் செய்த வினை பஞ்சு போல் ஆகிவிடும்.

**சீர்மேவும் நாவினா லடைத்திடாமற்**
**செலுத்தடா மனந்தனையுண் ணாக்குநேராய்ப்**
**பார்மேவும் அண்டவுச்சி தன்னிலேதான்**
**பாயுமடா வாசியுந்தான் பரத்தினூடே**
**தார்மேவும் மூலமடா தன்னிலிங்கம்**
**தானிருக்கும் மண்டலத்துட் டமர்தான்நிற்கும்**
**கார்மேவும் விந்துவடா பிடரிமார்க்கம்**
**கசிந்துருகி யிறங்குமடா கண்டுபாரே.**

**– சுப்பிரமணியர் ஞானானந்தம் 5 – கவி எண் 1.**

முதலில் ஒன்றில் சொன்னார், பிறகு இரண்டில் சொன்னார். இப்பொழுது ஐந்து பாடலில் ஞானத்தை சொல்ல முயற்சிக்கிறார். எல்லோரும் இந்தத் துறைக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறார். இப்படியெல்லாம் மறைப்பாக சொல்கிறார். நீ ஆசான் திருவடியை பற்றினால் அந்த மறைப்பு முழுவதும் தெளிவாக தெரியும்.

**சீர்மேவும் நாவினா லடைத்திடாமற்** – சீர் என்றால் சிறப்பு என்று அர்த்தம். மேவு என்றால் செல்லுகின்ற என்று அர்த்தம். சிறப்பு பொருந்திய ஒன்றை நாவினால் அடைத்திடாமல் என்கிறார். காற்றை கண்ட ஸ்தானத்தில் நிறுத்திடாமல் என்று சொல்லுகிறார்.

**செலுத்தடா மனந்தனையுண் ணாக்குநேராய்ப்** – காற்று வந்து போனால் மனம். வந்து போகின்ற காற்று நின்று விட்டால் அது பிணம். ஆகவே மனம் எதுவென்றால் காற்றுதான். கண்ட ஸ்தானத்தில் காற்றை ஏற்றிவிட்டு புருவ மத்தியில் காற்றை வாங்குவார்.

**பார்மேவும் அண்டவுச்சி தன்னிலேதான்**
**பாயுமடா வாசியுந்தான் பரத்தினூடே**

கண்டஸ்தானத்தில் காற்றை நிறுத்தி, புருவமத்திக்கு இழுக்க வேண்டும் என்று சொல்கிறார்.

**தார்மேவும் மூலமடா தன்னிலிங்கம்**
**தானிருக்கும் மண்டலத்துட் டமர்தான்நிற்கும்**
**கார்மேவும் விந்துவடா பிடரிமார்க்கம்**
**கசிந்துருகி யிறங்குமடா கண்டுபாரே.**

எந்த சுக்கிலத்தால் உற்பத்தி ஆனாயோ, எந்த சுக்கிலம் உன்னையும் என்னையும் படைத்ததோ, அந்த சுக்கிலம் கீழ் நோக்காது பிடரி மார்க்கமாக வந்தால், அவன் தேவன் என்கிறார். தோற்றுவித்த பொருளை அறிந்தவர்தான் சித்தி பெற முடியும். அந்த பொருளை யான் அடைந்தேன். அதையே உண்டேன். என்னை தோற்றுவித்த பொருளை நான் அறிந்தேன், உணர்ந்தேன், சிந்தித்தேன், தெளிந்தேன், உண்டேன், சித்தி பெற்றேன் என்கிறார். நான் சித்தி பெற, புறத்தே பொருளை தேடவில்லை. என்னுள் இருக்கின்ற பொருளை நான் அறிந்தேன், சித்தி பெற்றேன் என்கிறார்.

**கார்மேவும் விந்துவடா பிடரிமார்க்கம்**
**கசிந்துருகி யிறங்குமடா கண்டுபாரே.**

பிடரி மார்க்கம் என்றால் பின்பாகம். இந்த உடம்பு தோன்றுவதற்கு காரணம் சுக்கிலம் சுரோணிதம், அகபஞ்சபூதம் புறபஞ்சபூதம். இதையெல்லாம் அறிவது சின்ன விஷயமல்ல. மூடமும், அறியாமையும், தெளிவும் என்பதையே இந்த உடம்பு தோன்றுவதற்கு காரணம்.

எழுத்தும் ஒலியும் சேர்ந்துதான் நான் தோன்றியிருக்கிறேன். அந்த தோற்றத்தின் சாரம், பிடரி மார்க்கம் வரும். இவையெல்லாம் சொல்லி உணர்வதில்லை. அந்த தத்துவத்தை உணர நீங்கள் மிகத்தெளிவாக இருக்க வேண்டும்.

ஆசானுடைய திருவடிதான் உங்களை நிலை உயர்த்தும். அவருடைய பாதத்தைப் பற்றி பூஜிப்பதே நமது லட்சியம் என்று உறுதியாக நின்றேன். ஆசான் மீது அளவிலாத அன்பு கொண்டிருந்ததால் மற்ற மனிதர்கள் அறிய முடியாத ஒன்றை நான் அறிந்தேன். மனித வர்க்கம் உணர முடியாத ஒன்றை உணர்ந்தேன். மனித வர்க்கம் செய்யமுடியாத பிராணாயாமத்தை செய்தேன். மனித வர்க்கம் கேட்டறியாத சிலம்பொலியை கேட்கிறேன். மனித வர்க்கம் உண்ணமுடியாத அமிழ்தபானத்தை உண்ணுகிறேன்.

ஆகவே நான் அந்த லட்சியத்தை அடைவதற்கு எனது ஆசான் அகத்தீசர், மகான் திருமூலதேவர், ஆதி தலைவர் சுப்பிரமணியர் என்று சொல்லப்பட்ட பரம்பொருள் பாதத்தை பற்றினேன், இந்த ரகசியம் அனைத்தையும் அறிந்தேன். நாம் அடைந்த இன்பத்தை நீங்களும் பெற வேண்டும் என்பதற்காக இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

உங்களுக்கு புரியாவிட்டாலும் ஆதி தலைவன் சுப்பிரமணியர் கருணை கொண்டு சொன்ன நூலை கேட்டாலாவது, உங்களுக்கு ஆன்ம விளக்கம் ஏற்பட வேண்டும் என்பதற்காக சொல்லிக் கொண்டிருக்கிறேன். நாங்கள் சொல்வதை நீங்கள் விழிப்பாக கேட்க வேண்டும். அப்படி நீங்கள் விழிப்பாக கேட்டால் இந்த ஜென்மம் இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு ஜென்மத்திலாவது உங்களுக்கு தெளிவு கிடைக்கும் என்பதற்காக சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**பாரடா மனந்தனையுண் ணாக்கின்நேராய்ப்**
**பத்தியே அண்டமதைப் பார்க்கும்போது**
**ஆரடா வாசியுந்தான் பிடரிமார்க்கம்**
**ஆகாசப் பிரமத்தி லடங்கிப்போகும்**
**நேரடா நிருவிகற்ப சமாதியாச்சு**
**நித்யபிர்மச் சாரியென்று பேருண்டாச்சு**
**வீரடா சிலம்பொலியுங் காதிற்கேட்கும்**
**வேலெடுத்து வீதிசுத்தி வருகலாச்சே.**

**– சுப்பிரமணியர் ஞானானந்தம் 5 – கவி எண் 2.**

**வருகலாம் அக்ஷரத்தை நினைக்கும்போது**
**மைந்தனே மனம்பிரண்டாற் பிரிந்துபோகும்**
**உருகவே அக்ஷரத்தைத் தள்ளியேதான்**
**உன்மனமே அக்ஷரமாய் அண்டமேவிக்**
**குருபரன்போல் உன்மனதைச் செலுத்தும்போது**
**கோடிரவி மதியுடைய காந்திமீறும்**
**திருவருளால் லகிரியும் உயரத்தூக்கும்**
**சிவேனோடே சேர்ந்துவிளை யாடலாமே.**

**– சுப்பிரமணியர் ஞானானந்தம் 5 – கவி எண் 3.**

**ஆடலாம் ரவிமதியும் சுடர்தான்மூன்று**
**அண்டவுச்சி தன்னிலேதா னடங்கிப்போகும்**
**பாடலாம் பச்சையடா அண்டம்வாங்கிப்**
**பாச்சடா உப்பையுந்தா னண்டத்துள்ளே**
**தேடலாம் திருகுகள்ளிப் பாலுங்கூட்டித்**
**தில்லைப்பால் விட்டரைத்து அண்டவாயைக்**
**கூடலாம் உப்பையுந்தான் குவித்துமூடிக்**
**கொண்டுமும் மண்டலந்தான் புதைத்தெடுத்தே.**

**– சுப்பிரமணியர் ஞானானந்தம் 5 – கவி எண் 4.**

எடுத்திடவே மெழுகுபோற் றிரண்டுநிற்கும்
　எந்தெந்தச் சரக்கெல்லாம் இதமாய்நீறும்
அடுத்துமிகத் தாம்புரத்தில் நீரேவாங்கும்
　அடங்காத வியாதியெலா மருண்டேவோடும்
தடுத்துமிகப் போகாமல் அண்டமேவித்
　தன்மனமே சாட்சியதாய்த் தவமேசெய்து
கடுத்துமிகத் திரியாதே அகத்தியோனே
　கந்தர்நூல் கருத்தறிவா யைந்தும்முற்றே.

– சுப்பிரமணியர் ஞானானந்தம் 5 – கவி எண் 5.

<u>சுப்பிரமணியர் சுத்த ஞானம் 8</u>

பூரணத்திற் றானடங்கிப் பொறிகளைந்தும்
　போதமய மாய்நிறுத்திப் புருவமேவிக்
காரணத்தின் குண்டலியாங் கதிருக்குள்ளே
　கலந்தெழுந்த கேசரியைக் கடந்தப்பாலே
மாரணத்தில் நெருப்பாறும் மயிர்ப்பாலத்தில்
　மனதடங்கித் தான்கடந்து மவுனம்பெற்று
வாரணத்தின் முகத்தானை வணங்கியேதான்
　வடிவுடனே நிராமயத்தை வழுத்துவோமே. (1)

ஓமென்ற பிரணவமுங் கடந்தப்பாலே
　யுகமுடிந்த பட்டணத்திற் கப்பாற்சென்று
ஆமென்ற அச்சரங்கள் கீழ்மேலாக
　அடங்கியே பதினாறை யெட்டதாக்கி
நாமென்ற சொல்லற்று வெளியாய்ப்பாடி
　நந்தியுட கொலுவிருப்பை நன்றாய்ச்சொல்வேன்
காமென்ற பீடமடா சென்மசென்மம்
　கடந்தெழுந்தாற் பிர்மநிலை காட்டுவோமே. (2)

காட்டுகிறேன் அகத்தியமா முனியேகேளு
　கருத்தொன்றாய்த் தானிறுத்திக் கபடமற்று
நாட்டுகிறேன் மௌனத்தால் தினமுமாக
　நந்திகொலுச் சிங்கார நடனங்கண்டு
பூட்டுகிறேன் பிர்மத்திற் செல்லும்போது
　பொறிகளைந்துங் கருவிதொண்ணூற் றாறும்போகும்
வீட்டிலையும் அதிகமடா காந்திகண்டேன்
　வேல்முருக னென்றுபேர் விளம்புவாரே. (3)

**வாரான பிரமத்திற் செல்லும்போது**
**வஸ்துடனே மதுவுண்டு பசியுந்தீர்ந்தேன்**
**கூரான கமலவிம லமணிதன்னைக்**
**குறிப்பறிந்து விந்துவிலே கூட்டியொன்றாய்**
**நேரான கேசரத்திற் றூக்கிமைந்தா**
**நெடுந்தூரம் சுத்திநெருப் பாறுதாண்டி**
**வீரான ஆறுபடை வீடுதன்னில்**
**வெட்டவெளி நிராமயமாய் நின்றேன்பாரே. (4)**

**பாரப்பா கலைமாறி அமிர்தமுண்ணும்**
**பன்னிரண்டு முகத்தினுட வன்னியாலே**
**ஆரப்பா அஷ்டகர்ம வசியப்போக்கு**
**அறுபத்து நாலுசித்து மாட்டிவைக்கும்**
**கூரப்பா உப்பினுட நிலையுந்தோணும்**
**கூறாத மந்திரத்தின் கொடுமையாலே**
**வீரப்பா வாதமெல்லாம் கைக்குள்ளாகும்**
**விந்துமணி திரண்டிடவே வேதைதானே. (5)**

மோன நிலை என்பதுதான் மணியாகும். வேறெதிலும் மணி ஆகாது. மணி மணியாய் இருக்க வேண்டுமென்றால் மோன நிலையை அறியவேண்டும். வேதம் என்றாலே மணியாவதுதான். ஒரு மனிதனுக்கு சுக்கிலம் மணியானால் அவன் வேதத்தை அறிந்துவிட்டான் என்று பொருள். வேதத்தின் முடிவே சுக்கிலம் மணியாவதுதான். இந்த இரகசியத்தை எல்லோரும் சொன்னாலும் அதை அறிய முடியாது. மணியாகிவிட்டால் அந்தரத்தில் ஒரு சாந்தம் இருக்கும்.

**தானென்ற ஆணுவமு மடங்கிப்போகும்**
**தந்திநடு வட்டமதிற் றானேசெல்லக்**
**கோனென்ற வைத்தியமுஞ் சித்தியாகும்**
**கும்பிடுநற் சிப்பியுட கூர்மையாலே**
**தேனென்ற அகாரமுடன் உகாரந்தானும்**
**சிறந்தெழுந்த சிகாரமடா மூன்றினாலே**
**ஊனென்ற திரிகோணந் தன்னிற்சென்று**
**உண்மையென்ற மௌனத்தைக் கண்டுபாரே. (6)**

**பாரேநீ சாக்கிரமே யீசன்விந்து**
**பஞ்சேந்தி ரியத்தாலே மாயையாச்சு**
**ஆரே நீ யணுப்போலே தந்தைவிந்து**
**அப்பனே நாதமதில் அடங்கும்போது**
**சீரியே விடயமெட்டுங் கூடிச்சேர்ந்து**
**ஜெனிக்கையிலே பஞ்சேந் திரியமாச்சு**
**வீரியமாய்க் கருவிதொண்ணூற்றா றுமாக**
**விசைகொண்டு சென்மமுந்தா னெடுத்தவாறே. (7)**

**எடுத்ததினா லாவதென்ன மௌனம்பாரு**
**எட்டாத சுழிமுனையி லிருந்துகொண்டு**
**அடுத்துமிக மனந்தனையும் போக்கிடாமல்**
**அஷ்டாச்ச ரத்தினுட அருமைபெற்றுத்**
**தொடுத்துமிகக் கருமமெல்லா மறிந்துகொண்டு**
**சுத்தசலந் தன்னிலேதான் சுகிர்தமாகத்**
**தடுத்துமிக மூழ்கிடவே காந்திமீறும்**
**சார்ந்தவருக் கெந்நூலு மெட்டுமுற்றே. (8)**

பல கோடானுகோடி அணுக்களால் ஆனது நம்முடைய உடம்பு. சிற்றணுக்களால் உண்டான உன் தேகத்தைக் கொண்டு, மோனநிலையை அறியமுடியாது. ஆசானை வணங்கி பூஜை செய்து ஆசியைப் பெற்றுதான் அறிந்து அடைய முடியும். நீங்களெல்லோரும் இதை அறிய வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன் வணக்கம்.

–சுபம்–

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு

**R.சுரேஷ்** – 94434 21935

ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

**www.agathiar.org**

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள்

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**
**துறையூர்.**

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## மாசி பௌர்ணமி விழா

நாள் : **விளம்பி ஆண்டு, மாசி மாதம் 7ஆம் தேதி,**
**19.02.2019 - செவ்வாய் காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## பங்குனி பௌர்ணமி விழா

நாள் : **விளம்பி ஆண்டு, பங்குனி மாதம் 6ஆம் தேதி,**
**20.03.2019 - புதன்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

# மகான் திருமாழிசை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. **கருணாமூர்த்தியே கந்தமகா சக்தியே**
**கலிகால மக்களை காக்கவே**
**தருமம் செய்து யுகம் மாற்ற**
**தவசியாக வந்த அண்ணலே**

2. அண்ணலே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
நன்னயமாய் **விளம்பி கலை திங்கள்**
**நாட்டிட ஏகதிகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 1ம் நாள் 15.01.2019, செவ்வாய்க்கிழமை)**

3. **வாரமதில் திருமாழிசை ஆழ்வார் யானும்**
வழங்குவேன் உலகோர் நலமுற
சோரமிலா தொண்டர் படையை
சுத்தநெறி கொண்டு உருவாக்கி

4. உருவாக்கி சன்மார்க்க நெறி
உலகமெங்கும் பரப்பி வர
குருவரங்கன் சொல்லும் வேதம்
குவலயத்தை ஆளும் என்பேன்

5. என்கவே அரங்கன் சீடர்களென
எல்லா தேசமும் பரவி நின்று
சன்மார்க்க விதி முறைகளுடன்
சகலருக்கும் சமத்துவநிலை பெருகி

6. பெருகியே உலகம் எங்கும்
பேதமிலா ஒரே குலமாகவே
முருகன் ஆளுமை கொண்டநல்
முழுமை பெற்ற ஞானியாம் அகத்தியர் குலமாக

7. குலமாக பரவி குவலயமே
குருராசன் மூலம் ஒன்றிணையும்
பலமான ஞானஆட்சியாக மாறி
பாருலகே வளம்பல காணும்

8. காணவே மேல்நிலை பெற
கலியுகத்தில் பொய்நிலை மாற
ஞான தேசிகனாரிடம் தீட்சை
ஞாலமுடன் முழுமதி பூசை காலம்

9. காலமதில் வந்து ஏற்று
கலியுகத்தார் வணங்கி வருக
கோலமதாய் ஞானிகள் பூசையை
குடியவர்களுடன் இணைந்து செய்ய

10. செய்யவே அவரவர் வாழ்விலும்
சிறப்பான நிலைகள் காண்பதுடன்
மெய்ஞானம் மனபலம் பெருகி
மேலவர்கள் துணை கொண்ட ஞானி

11. ஞானி அரங்கனே கலியுகத்தில்
ஞானபண்டிதன் சக்தி கொண்டு
ஞானிகளை உருவாக்கும் ஞானி எனும் உண்மை
நம்பகமுற உணர அறிய நேரும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருமாழிசை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கருணையே வடிவான கருணாமூர்த்தியே கந்தமகா சக்தியே கலியுகத்தின் கோரப்பிடியினுள் சிக்கி தவிக்கின்ற மக்களை காத்து ரட்சிக்கவே தர்மங்கள் செய்து இவ்வுலகை தர்ம உலகமாக மாற்றிடவே தர்மயுகமான ஞானயுகம் படைக்கவே மகா தவசியாக வந்துதித்திட்ட அண்ணலே முருகப்பெருமானின் அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 1ம் நாள் 15.01.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருமாழிசை ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமாழிசை ஆழ்வார்.

குற்றமற்ற தொண்டர் படையை அரங்கா உமது சுத்தநெறி மூலம் உருவாக்கி தூய தொண்டர்கள் மூலம் உலகமெலாம் சன்மார்க்க நெறியினை அற்புதமாய் பரப்பி வருகின்றாயப்பா. குரு அரங்கன் சொல்லும் ஞான கட்டளைகளே வேதங்களாக வேதவாக்குகளாக ஆகி இவ்வுலகை ஆளும் என்பேனப்பா.

உலகின் பல பகுதிகளிலும் அரங்கனைப் பின்பற்றி அரங்கனின் சீடர்கள் எல்லா தேசங்களிலும் பரவி நிற்பார்கள். ஆதலினால் உலகமெலாம் சன்மார்க்கவாதிகள்

பரவி நிற்கும் சகல மக்களுக்கும் சமத்துவ நிலை பெருகி நின்று உலகமெங்கும் பேதாபேதங்களான வேற்றுமைகளும், பாகுபாடுகளும் நீங்கி உலகமே பேதாபேதம் இல்லாத ஒரே குலமாக ஆகி முருகப்பெருமானின் ஆட்சியின் கீழ் முழுமை பெற்ற மகா ஞானி அகத்தியர் குலமாக பரவி நிற்கும்.

அரங்கனின் கொள்கைகளால் உருவான அகத்தியர் குலம் உலகமெலாம் பரவி அரங்கமகா தேசிகனாரின் மூலமாக ஒன்றிணையும். ஒன்றிணைந்து பலம்மிக்க ஞான ஆட்சியாக மாறி இந்த பேருலகமே இயற்கை பேரிடர்கள் இல்லாது போய் பலவிதமான வளங்களையும் கண்டு சிறப்படையும்.

கலியுகத்திலும் மக்கள் மேல்நிலையை அடைந்திட வேண்டுமாயின் கலியுகத்தின் மாயையான பொய்நிலைகள் மாறிட அவரவரும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கரிடத்து தீட்சை உபதேசம்தனை அடைந்து அரங்கன் உலக நலன் கருதி பௌர்ணமி தோறும் நடத்தும் பௌர்ணமி சிறப்பு சித்தர்கள் பூசை கலந்து ஏற்றுக் கொண்டு குடும்பத்தினருடன் ஞானிகளை வணங்கி வர வேண்டும்.

இவ்விதமே செய்பவர்கள் வாழ்வினுள் சிறப்பான நிலைகள் எல்லாம் உண்டாவதுடன் மெய் ஞானபலம் பெருகும், மனோபலம் பெருகும், ஞானிகளின் துணை கொண்ட ஞானவான் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே கலியுகத்தினுள் முருகப்பெருமானின் சக்தியெல்லாம் தன்னகத்தே கொண்டு உலகினில் ஞானிகளை உருவாக்கும் மகா ஞானியாவார் என்ற அரும்பெரும் உண்மையை உலகமே நம்பிக்கையுடன் அறிந்திட நேருமப்பா, அவரே மகா ஞானி என உலகறிய தமது ஒளி சூட்சும நூல் மூலம் உரைக்கின்றார் மகான் திருமாழிசை ஆழ்வார்.

–சுபம்–



# மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. **அருட்குருவே அரங்கா வாழ்க**
   **ஆற்றலாய் தரும சக்தியாக**
   **அருட்சுடராக வந்த அண்ணலே**
   **அகிலமதில் அரங்கனுன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குறையிலா **விளம்பி கலை திங்கள்**
   **தெரியவே உபய திகதி புந்தி வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 2ம் நாள் 16.01.2019, புதன்கிழமை)**
   **தேசிகனுக்கு திருமங்கை ஆழ்வார் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உயர்வான தரும நெறியை
   ஞானவழியாக பின்பற்றி வருக
   நம்பிக்கை கொண்டு பெண்களும் வருக

4. வருகவே அரங்க மகானிடம் ஆசி
   வல்லமையான தீட்சையும் பெற்று
   முருகா என வழிபாடுகள் தொடர
   முழுமை பெறும் ஞானிகளை தரவல்ல

5. தரவல்ல சக்திகளாக பெண்களிருக்க
   தங்களை உண்மை நெறி வழி
   தரமான சுத்த சைவம் ஏற்பதுடன்
   தேக மனோபலம் அடையும் வண்ணம்

6. வண்ணமுடன் ஞானநூல்களை பயின்று
   வளமுற தேகபலமுற குரு ஆசி பெற்று
   எண்ணம் வழி சத்தான ஆகாரம்
   இனிதே உண்டு கொண்டுமே

7. கொண்டுமே கர்ப்ப காலங்களில்
   கோபம் வஞ்சமிடர் எண்ணமிலா
   தொண்டு மனப்பான்மைபட
   தருமங்கள் மிகுதி செய்து கொண்டு

8. கொண்டுமே ஞானிகள் பெருமக்களை
கும்பிட்டு நித்ய பூசை செய்தும்
தொண்டுபட வாழ்க்கை நடத்தி
தேசிகனார் ஞானிகள் பூசை கலந்து

9. கலந்து ஆசி பெற்று வருவதுடன்
கருணைமிகு அரங்கன் தருமம்
பலமான அருளமுதாக இருக்க
பணிந்து உண்டு வருதலுற

10. **வருகவே பெண்கள் யாவரும்
வல்லமைபட ஞானி ஆவதுடன்
பெருமைமிகு ஞான சேய்களையும்
பெற்றெடுத்து பேருபுகழ் அடைவர்**

11. புகழ் தரும் அரங்க ஞானியர் மூலம்
பெண்களுக்கும் முக்தி வாய்ப்பிருக்க
வகைபட ஞானியரை ஏற்று
வணங்கிவர கலியுகமே மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அளவிலாது அருள்பலம் பெற்றிட்ட அருட்குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. எல்லையில்லா ஆற்றலாய் தருமத்தின் சக்தியாக அருட்பெருஞ்ஜோதி சுடராக வந்துதித்த அவதார ஞானியே அண்ணலாக இவ்வுலகினில் வந்துதித்த அரங்கமகாதேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 2ம் நாள் 16.01.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருமங்கை ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமங்கை ஆழ்வார்.

எல்லா நன்மைகளையும் தந்தருளும் உயர்வான தருமத்தின் நெறியினை ஞானவழியாக மக்களெல்லாம் பின்பற்றிட வேண்டும். தருமநெறியிலே நம்பிக்கையுடன் பெண்களும் கடைப்பிடித்து வருவதுடன் தர்மத்தின் தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து பயபக்தியுடன் பணிந்து தீட்சை உபதேசம் அடைந்து வல்லமைகளை பெறுவதுடன் ஞானத்தலைவன் முருகப்பெருமானை மனம் உருகி முருகா முருகா முருகா என வழிபாடுகள் செய்தும் வர வேண்டும்.

முற்றுப்பெற்ற ஞானிகளை இவ்வுலகிற்கு தந்தருளும் சக்திகளாக பெண்கள் இருக்கின்றபடியினாலே ஞானிகளை பெற்றெடுக்கும் தாயாக பெண்கள் இருப்பதினாலே அவர்களெல்லாம் உண்மை நெறியின் வழியில் சென்று கொள்கைகளை கடைப்பிடிப்பதுடன் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து சுத்த சைவத்தை மேற்கொண்டு மசால் பொருட்களை தவிர்த்தும், மந்தநிலையை உண்டுபண்ணும் வகையான உணவுகளான கிழங்குவகை உணவுகளை தவிர்த்தும், உடல் பலம் பெறும் வகையிலும் மனோபலம் பெறும் வகையிலும் நல்ல ஞானநூல்களை பயின்று வளமான தேகபலம் பெற்றிட உத்தமமகா ஞானி ஆறுமுக அரங்கனிடத்து அருளாசிகளைப் பெற்று சிந்தையில் முருகப்பெருமானை வைத்து சத்துள்ள ஆகாரங்களை இனிதே உண்டு வருவதுடன் ஞானச்சேய்களை பெற வேண்டியிருப்பதினாலே கர்ப்பகாலங்களில் கோபம், வஞ்சம், இடர் செய்யும் தீமையான எண்ணங்கள் ஏதும் இல்லாமல் தொண்டு மனப்பான்மையுடன் தருமங்களை அதிகமாக செய்து தினம்தினம் மறவாமல் ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பூஜைகள் செய்தும் வர வேண்டும்.

தம்மால் இயன்ற அளவு தொண்டுகளை செய்வதுடன் வாழ்க்கை நடத்தி உலக நலன் கருதி அரங்கமகா தேசிகனார் நடத்தும் ஞானபூஜைகளிலே கலந்து ஆசி பெற்று வருவதுடன் கருணையே வடிவான அரங்கன் செய்கின்ற தருமங்களில் கலந்து அரங்கன் அளிக்கும் ஞானஅமுதாகிய குடில் உணவை பணிந்து உண்டுவர வேண்டும்.

இவ்விதமே செய்து வரவர, பெண்கள் யாவரும் வல்லமையுடன் ஞானி ஆவதுடன் வல்லமைமிக்க பெருமைமிக்க ஞானகுழந்தைகளையும் பெற்றெடுத்து பேர்புகழை அடைந்து சிறப்பார்கள்.

எல்லையில்லா புகழ்மிக்க அரங்கமகா தேசிக ஞானயோகியர் மூலமாக பெண்களுக்கும் முக்தியடையும் வாய்ப்பு இருக்கின்றதப்பா. ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க மகளிர் யோகா மன்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் பெண்களுக்கு எளிமையான யோகநெறிகளை கற்பித்து வர வேண்டும். ஆதலால் அனைவரும் அரங்கமகா தேசிக மகா ஞானியரை மனமார குருவாக ஏற்று வணங்கி வரவர, இந்த கலியுகமே மாற்றமடைந்து ஞானயுகமாக ஆகிடுமப்பா என மகான் திருமங்கை ஆழ்வார் உரைக்கின்றார்.

–சுபம்–



சென்னை, திரு. முருகானந்தம், அவர்கள் ஓங்காரக்குடிலாசானின் அருளால் பெற்ற அனுபவங்கள் குறித்து. . .

அன்புள்ள ஞானத்திருவடி வாசகர்களுக்கு வணக்கம்.

ஓம் அகத்தீசாய நம

ஓம் நந்தீசாய நம

ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

ஓங்காரக்குடிலில் நான் பெற்ற அனுபவங்களை உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் சென்னையில் வசித்து வருகிறேன். எனக்கு இயல்பாகவே முருகப்பெருமான் மீது அதிக நாட்டமும் பக்தியும் இருந்தது. நான் கோவிலுக்கு செல்லும்போதெல்லாம் முருகப்பெருமானை மட்டும் விரும்பி வணங்குவேன், முருகப்பெருமானுக்கு மட்டுமே அபிஷேகம் செய்வேன். முருகப்பெருமானை சிவன் பார்வதியின் மகன் என்றும், முருகனுக்கு வள்ளி தெய்வானை மனைவி என்றும் நினைத்து நானும் வணங்கினேன். வீட்டில் முருகப்பெருமான் தனியாக உள்ள படம் வைக்கக் கூடாது என்றும், வள்ளி தெய்வானையோடு இருக்கின்ற படத்தைதான் வைத்து வணங்க வேண்டுமென்றும் எனக்கு சொன்னார்கள். நானும் முருகப்பெருமானை யார் என்று தெரியாமலேயே வணங்கி வந்தேன்.

ஓங்காரக்குடில் அன்பர் பிரபு மற்றும் அவரது அண்ணன் தியாகு ஆகிய இருவரும் துறையூர் ஓங்காரக்குடிலைப் பற்றியும், ஓங்காரக்குடிலாசானைப் பற்றியும் எனக்கு சொன்னார்கள். அன்றுமுதல் அவர்களை சந்திக்கும்போதெல்லாம் எனக்கு ஏற்படும் ஆன்மீக சந்தேகங்களை கேட்பேன். அதற்கு அவர்கள் ஓங்காரக்குடிலாசான் சொன்ன ஆன்மீக விளக்கங்களை என்னிடம் சொல்வார்கள். ஓங்காரக்குடில் அன்பர் ஜெயராஜ் அவர்களை நான் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது துறையூர் துறவியார், குருநாதர், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர், அவரை தரிசிப்பது பெரும் பாக்கியம் என்று ஜெயராஜ் அவர்கள் எனக்குச் சொன்னார். இதைக் கேட்டது முதல் குருநாதரை தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. ஜெயராஜ் அவர்களிடம் குருநாதரை தரிசிக்க வேண்டும் என்று எனது விருப்பத்தை கூறினேன்.

ஜெயராஜ் அவர்கள் ஓங்காரக் குடிலுக்கு செல்லும் போது என்னையும் அழைத்து சென்றார்கள். ஓங்காரக்குடிலில் குருநாதரை அடியேன் தரிசித்து ஆசி பெற்றேன். குருநாதர் அவர்கள் முருகா என்று சொல், என்று ஆசி வழங்கினார்கள். ஆசான் அவர்கள் மிகவும் எளிமையாக, தாய்மை குணத்தோடு அவர் காட்டும் அன்பு என்னை வியக்க வைத்தது. ஒரு தீபம் ஏற்றி ஓம் சரவணஜோதியே நமோ நம என்று முருகப்பெருமானை பூஜை செய்து வந்தால் முருகப்பெருமானின்

அருளை நாம் பெற்று நிலை உயரலாம் என்ற குருநாதர் உபதேசத்தை என்னிடம் அன்பர்கள் கூறினார்கள். அன்று முதல் தொடர்ந்து முருகப்பெருமானை பூஜை செய்து வருகிறேன்.

நான் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில் குருநாதரை தரிசித்து வணங்கிய பிறகு, குருநாதரின் சொற்பொழிவுகளை கேட்டு வந்தேன். அப்படி கேட்டபோதுதான் முருகப்பெருமான்தான் இவ்வுலகில் தோன்றிய முதல் சித்தர் என்பதையும், அவர்தான் சித்தர்களுக்கு தலைவர் என்பதையும், அவர் வழி வந்தவர்களே நவகோடி சித்தர்கள் என்பதையும் அறிந்தேன். இதுவே உண்மையான ஆன்மீகம் என்பதையும் உணர்ந்தேன்.

வீட்டில் ஏதாவது ஒரு துன்பமோ, வியாபாரத்தில் கஷ்டம் வரும்போதோ, நாம் செய்த முன்வினை காரணமாகதான் இந்த துன்பம் வந்தது என்பதை உணர்ந்து, அதை நீக்குவதற்கு முடிந்த அளவு அன்னதானமும், நாமஜெபமும் செய்து வாருங்கள் என்றும் நமக்கு துன்பம் வரும் போது அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், பிறர் மனம் புண்படும்படி பேசக் கூடாது என்றும் குருநாதர் அருளுரையில் சொன்னதை கேட்டவுடனே இதுதான் உண்மையான சன்மார்க்கம் என்பதை உணர்ந்தேன். பௌர்ணமி தோறும் துறையூருக்கு வந்து ஓங்காரக்குடிலாசானை தரிசித்து செல்வேன்.

இப்பொழுது எங்கள் குடும்பத்தினர் ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கிறோம். இவ்வுலகினில் ஓங்காரக்குடிலாசானைத் தவிர யாரும் நம்மை துன்பத்திலிருந்து காப்பாற்ற முடியாது.

எனவே மக்களே முருகப்பெருமானாக வீற்றிருக்கும் குருநாதரை தரிசனம் செய்து, ஆசியைப் பெற்று நலமோடு வாழ ஓங்காரக்குடிலுக்கு வாரீர் வாரீர்.

குருநாதர் எழுதிய சித்தர்களின் பெருமைகளை பேசும் ஞானத்திருவடி நூல் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய நூல். இந்த நூல் வீட்டிலிருந்தால் கடவுள் நம் வீட்டில் இருப்பதற்கு சமமாகும். என்னால் முடிந்த அளவிற்கு ஞானத்திருவடியை பொதுமக்களுக்கு கொடுப்பதற்கு தொண்டு செய்து வருகிறேன். எல்லோரும் ஞானத்திருவடி நூலை வாங்கி பயனடைய வேண்டுமென்று குருநாதர் திருவடி பணிந்து முடிக்கிறேன் வணக்கம்.

குருநாதர் திருவடி பணிந்து,

முருகானந்தம்,

சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

# ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 60 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு<br>ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம்,<br>அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான்<br>கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |


**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

...................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

## நன்கொடை வழங்க...

### அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

# தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

**உயிர் இரக்கமே இறைவழிபாடு....**


**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

**ம. அருள் பிரகாசம்**

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

**Cell : 98841 27766 , 94449 88877**

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. –குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

# "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

No.72A – 100 அடி ரோடு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828. ✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

எவ்வகைத் திறத்தினும் எய்துதற்கு அரிதாம்
அவ்வகை நிலையெனக் களித்த நற்றந்தையே
இனிப் பிறவாநெறி எனக்களித்து அருளிய
தனிப்பெரும் தலைமைத் தந்தையே தந்தையே
பற்றயர்ந்து அஞ்சிய பரிவுகண் டணைந்து எனைச்
சற்றுமஞ்சேல் எனத் தாங்கிய துணையே
தளர்ந்தவத் தருணம்என் தளர்வெலாம் தவிர்த்துட்
கிளர்ந்திட எனக்குக் கிடைத்த மெய்த்துணையே
துறையிது வழியிது துணிவிது நீசெயும்
முறையிது எனவே மொழிந்த மெய்த்துணையே

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

*கவனகரின்*

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கொளத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

காலை 6.00 முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு
ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்
தியானம் (நாமஜெபம்)

காலை 7.30 பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம்.

காலை 8.00 ஓங்காரக்குடிலில் அன்னதானம்

மதியம் 1.00 ஓங்காரக்குடிலில் அன்னதானம்

**மதியம் 3.00** முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்**

மாலை 5.00 கிராம அன்னதானம்

மாலை 6.00 அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)
ஆசான் அகத்தீசர் வழிபாடு

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,
113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,
வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ______________________

முகவரி : ______________________

______________________

ஊர் : ______________ பின்கோடு ________

வட்டம் : ______________ மாவட்டம் ________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்